# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 25 2020

Weekly E-paper • February 25, 2020




# ட்ரம்ப்பைக் கொண்டாடும் நாடு ! தில்லியிலோ துப்பாக்கிச் சூடு !!

• சுப.வீரபாண்டியன்

**ஆதிக்க மொழிக்கு 640 கோடியா?**

வெற்றிச்செல்வன்

**இதுதான் நடிகர் ரஜினி அரசியல்**

தலையங்கம்

நூல் அறிமுகம்

**ஸ்டீபன் ஹாக்கிங் பார்வையில் கடவுள் உண்டா?**

ஆர்.இளம்வழுதி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 25 2020 Weekly E-paper • February 25, 2020


# ட்ரம்ப்பைக் கொண்டாடும் நாடு ! தில்லியிலோ துப்பாக்கிச் சூடு !!

• சுப.வீரபாண்டியன்





அமெரிக்காவில் 'ஹவ் டி மோடி' என்றால், இந்தியாவில் 'நமஸ்தே ட்ரம்ப்'. இருவருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அமெரிக்காவில் அவரும், இந்தியாவில் இவரும் இந்தியர்களை நசுக்குகின்றனர் என்பதுதான் அது!

ஒருவரை ஒருவர் போற்றிப் புகழ்ந்து புளகாங்கிதம் அடைந்து கொண்டிருக்கும் வேளையில், தன் பேச்சுக்கிடையில் ட்ரம்ப் ஒன்றைக் குறிப்பிடுகிறார். "இந்தியாவும், அமெரிக்காவும் இஸ்லாமிய தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒழித்துக்கட்ட இந்தியாவுடன் அமெரிக்கா இணைந்து செயல்படும்" என்கிறார் ட்ரம்ப்.

மத அடிப்படையில் மக்களைப் பாகுபடுத்தி, ஒரு குறிப்பிட்ட மதத்தினரை அழிப்பதற்கு இருவரும் முடிவெடுத்து விட்டனர் என்பதையே இது காட்டுகின்றது. தீவிரவாதத்திற்கும், மதத்திற்கும் என்ன தொடர்பு? எந்த மதத்தில் தீவிரவாதம் இல்லை? ஏன் ஒரு குறிப்பிட்ட மதத்தை மட்டும் குறிவைக்கின்றனர்?

இப்படி வெளிப்படையாக மத வெறி அரசியல் குஜராத்தில் பேசப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில்தான், தில்லியில் மக்களின் மீது ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

தில்லியில் ஷாஹின் பாக் என்னுமிடத்தில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக, கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக மக்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர், அந்தப் போராட்டம் இன்று நாடு முழுவதும் பரவிக் கொண்டுள்ளது. அது குறித்து மக்களை அழைத்துப் பேசாமல், "உங்களால எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் நீங்கள் எதிர்த்துப் பாருங்கள்" (Oppose as much as you can) என்கிறார் அமித்ஷா. எவ்வளவு ஆணவம்!

நேற்று தில்லியில், ஜாபராபாத் என்னும் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு எதிராக, பாஜக வைச் சேர்ந்த கபில் மிஸ்ரா (அந்த ஊர் ஹெச். ராஜா போலிருக்கிறது) என்பவரின் தலைமையில் ஒரு கும்பல் சி ஏ ஏ ஆதரவுப் போராட்டம் நடத்தியுள்ளது. (ஆதரவுக்கு ஏன் போராட்டம்!) அப்போது அங்கு ஏற்பட்ட மோதலைத் தடுப்பதாகச் சொல்லி அங்குவந்த காவல்துறை, தடியடி, துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது. ஒரு காவலர் உள்பட ஐவர் இறந்து விட்டனர்.

இங்கே இரண்டு செய்திகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் படு பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வேளையில், அது குறித்துக் கவலைப்படாமல், மதத்தின் பெயரால் மக்களை ஒடுக்கும் வேலையை அரசு செய்து வருகின்றது. இன்னொன்று, இஸ்லாமிய மக்களைத் தனிமைப்படுத்த முயல்கிறது.

இது இஸ்லாமிய மக்களின் போராட்டம் அன்று. மதச் சார்பின்மையை ஆதரிக்கும் ஒவ்வொருவரின் போராட்டமும் ஆகும். ஈழத்தமிழருக்கான குடியுரிமைப் போராட்டமும் ஆகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, அந்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த அதிமுக, பாமக ஆகிய கட்சிகளுக்கு எதிரான போராட்டமும் ஆகும்!

மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாக, 2 கோடிப் பேர்களிடம் கையொப்பம் பெற்ற திமுக தலைமையிலான கூட்டணியும், இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த மாபெரும் பேரணியைத் திருச்சியில் நடத்திய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் பாராட்டிற்குரியன.

இஸ்லாமியர்களும், ஈழத்தமிழர்களும் நம் ரத்தம், நம் உறவு, நம் சொந்தச் சகோதரர்கள். ஆரியப் பார்ப்பனர்கள் மட்டுமே நமக்கு அந்நியர்கள்!

•

# ஆதிக்க மொழிக்கு 640 கோடியா?

● வெற்றிச்செல்வன்

*செழுமை மற்றும் புனிதத்தன்மை ஆகிய காரணங்களால், கடவுளர்களின் மொழியான சமஸ்கிருதம் மட்டுமே தேசிய உறவாடல்களுக்கான பொதுத் தளமாக இருக்க முடியும்.*

-கோல்வால்கர் (Bunch of Thoughts, பக்கம் 112)

கடந்த மூன்று ஆண்டுகளில், சமஸ்கிருத மொழியின் வளர்ச்சிக்கு மட்டும் ரூ. 643.84 கோடி நிதியைச் செலவிட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. அதே நேரம், தமிழ் உள்ளிட்ட பிற செவ்வியல் மொழிகளுக்குக் குறைவான அளவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, மொழிகளை அணுகுவதில் இந்திய அரசுக்கு உள்ள சமத்துவமற்ற மனப்பாங்கையே இது காட்டுகிறது.

தமிழுக்கு மட்டும் இந்த நிலை என்று எண்ணிவிட வேண்டாம். 2019-20 ஆண்டிற்குத் தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை முறையே 10.59, 1.07 மற்றும் 1.07 கோடிகளாகும். ஆனால் சமஸ்கிருதத்திற்கு மட்டும் ரூ. 231.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற செவ்வியல் மொழிகளைப் போல, செவ்வியல் மொழிகளான மலையாளம் மற்றும் ஒடியா மொழிகளின் வளர்ச்சிக்காகத் தனியாக ஒரு நிதியம் இன்னும் உருவாக்கப்படவில்லை. உத்தரகாண்ட் மாநில அரசோ, இதுவரையில் உருது மொழியில் எழுதப்பட்டிருந்த இரயில் நிலையங்களின் பெயர்களைச் சமஸ்கிருத மொழிக்கு மாற்றப்போவதாக அறிவித்துள்ளது.

ஒருபக்கம், தஞ்சைப் பெரிய கோயில் குடமுழுக்கைத் தமிழில் நடத்துவதற்கே நீதிமன்றத்தை நாடும் நிலைதான் தமிழ்நாட்டில் உள்ளது. மறுபக்கமோ அண்ணா பல்கலைக்கழகத்தில் கல்வியின் பெயரால் சமஸ்கிருதத்தையும், சனாதனத்தையும் திணிக்கும் முயற்சி நடைபெறுகிறது.

புதிய கல்விக் கொள்கையின் மூலம் சமஸ்கிருதத்தைத் திணிக்கும் முயற்சி ஒருபுறம் நடக்க, சமஸ்கிருதம் பேசினால் சர்க்கரை குறையும் என்று பாஜக நாடாளுமன்ற உறுப்பினரின் பேச்சால், பாஜக சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது. கடந்த வாரம் லக்னௌ பல்கலைக்கழகத்தில் பேசிய உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் எல்லா இந்திய மொழிகளுக்கும் சமஸ்கிருதமே அடிப்படை என்று உளறிக்கொட்டியிருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ்.-இன் கொள்கைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றி வரும் பாஜக அரசு, காங்கிரஸ் அரசில் சமஸ்கிருதத்தின் வளர்ச்சிக்காகச் செய்யப்பட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதில் வியப்பில்லை. ஏற்கெனவே, இந்தியைத் திணிப்பதன் மூலம் மறைமுகமாக சமஸ்கிருதத் திணிப்பில் ஈடுபட்டிருந்த நடுவண் அரசு, இப்போது நேரடியாகவே சமஸ்கிருதத்தை மட்டும் வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதனை உணர்ந்தே தமிழகம் அன்றிலிருந்து இன்றுவரை, இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது; இன்றும் திகழ்கிறது.



M.K.Stalin
@mkstalin

கடந்த 3 ஆண்டுகளில் சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டது ரூ.643.84 கோடி, செம்மொழி தமிழின் வளர்ச்சிக்கு ஒதுக்கியதோ வெறும் ரூ. 22.94 கோடி!

மத்திய அரசு தமிழ் மொழிக்கு எதிரானது என்பதை உணர்ந்து, மொழி உரிமை காக்க உரிய நிதி கோரி பெறுவதற்கான முதுகெலும்பற்றது எடப்பாடி அரசு. #DMK4Tamil

நடுவண் அரசில், காங்கிரஸ் இருந்தாலும் பாஜக இருந்தாலும், இந்தி அல்லது சமஸ்கிருதத்தைத் திணிக்கும் போக்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மொழிவழித் தேசிய உணர்ச்சியை மழுங்கடிக்கச் செய்வதற்கான இதுபோன்ற முயற்சிகளுக்கு எதிராக மாநில அரசுகள் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும். இந்தி மொழியின் வளர்ச்சியை ஊக்குவிப்பது, ஒன்றிய அரசின் கடமையாகும் (Article 351 - It shall be the duty of the Union to promote and spread the Hindi language) என்று சொல்லும் இந்திய அரசமைப்பின் 351வது உறுப்பு, கூட்டாட்சித் தத்துவத்திற்கே முரணானது. இப்பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும். அப்போதுதான் இந்தியாவின் பன்மைத்துவம் காக்கப்படும்.

பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களின் வரிப்பணத்தால் நடைபெறும் இந்திய அரசு, ஒரு மொழியை வளர்ப்பதற்காக மட்டும் அளவில்லாமல் பணத்தை வாரியிறைப்பது மொழிச் சமத்துவத்திற்கு எதிரானது மட்டுமன்று, கூட்டாட்சித் தத்துவத்திற்கே எதிரானது. இதனை ஒன்றிய அரசு உணர வேண்டும்.

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## அனைத்துக் கட்சிக் கூட்டம்




13-02-2020 அன்று சமூக நீதிக்கு எதிரான மத்திய பாஜக அரசின் நடவடிக்கையை எதிர்க்கும் விதமாக திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள், சென்னை பெரியார் திடலில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அந்தக் கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் தோழர் சுப.வீராபாண்டியன் கலந்து கொண்டு பேரவையின் கருத்தைப் பதிவு செய்தார். அவருடன் தோழர்கள் எழில்.இளங்கோவன், மு.மாறன், எட்வின், முத்தையா குமரன், கார்த்திக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல், மத்திய அரசுக்கு எதிர்ப்பு



21-02-2020 அன்று மத்திய பாஜக அரசின் இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக திண்டுக்கல், பேகம்பூரில் நடைபெற்ற எதிர்ப்புக் கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக தோழர் புலேந்திரன் தலைமையில் பேரவைத் தோழர்கள் கலந்து கோண்டார்கள்.

## பேரா.கருணானந்தம் கருத்தரங்கம்



16-02-2020 அன்று "மோடியின் மக்கள் வரலாறும், வரலாற்றுத் திரிபுகளும்" என்ற தலைப்பில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் திண்டுக்கல் மாவட்டம் சார்பாக நடத்தப்பட்ட கருத்தரங்கில் பேராசிரியர் கருணானந்தம் கருத்துரை வழங்கினார்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இதுதான் நடிகர் ரஜினி அரசியல்



தூத்துக்குடி வேதாந்தாவின் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் கூடிப் போராட்டம் நடத்திய போது காவலர்களின் துப்பாக்கிச் சூட்டில் சிலர் உயிரிழந்தனர்.

இதைக் கேட்ட நடிகர் ரஜினி தூத்துக்குடிக்கு ஓடோடிச் சென்று பார்த்து விட்டுச் சென்னை திரும்பினார். அப்போது அவர் அளித்த பேட்டியில் காவலர்கள் மீது எந்தத் தவறும் இல்லை. போராடியவர்கள் எல்லாம் வன்முறையாளர்கள் என்று சொன்னார்.

ரஜினியின் தொடர் பேச்சுகள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ், பாஜகவைச் சார்ந்தே இருக்கின்றன.

இந்நிலையில் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு குறித்து விசாரிக்கும் ஒருநபர் ஆணையம் நடிகர் ரஜினியை, நேரில் வர ஆணையிட்டது.

தான் நேரில் வந்தால் ரசிகர்கள் கூட்டம் பெரும் அளவு கூடிவிடுவார்கள். அது விசாரணையைப் பாதிக்கும். ஆகவே நேரில் வருவதில் இருந்து தனக்கு விலக்கு அளிக்குமாறு மனு போட்டிருக்கிறார், நடிகர் ரஜினி.

இது 'தமாஷ்'ஆக இருக்கிறது.

இதுவரை நடிகர் ரஜினி எந்தப் பொது நிகழ்விலும் கலந்து கொள்ளவில்லையா?

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டிற்குப் பின் தூத்துக்குடி சென்றாரே அவர். அப்பொழுது அங்கு ரசிகர்கள் கூட்டம் கட்டுக்கடங்காமல் கூடி, அவரால் சட்டம் ஒழுங்கு பாதிக்கவா செய்தது? அல்லது அவர் மாறுவேடமிட்டுச் சென்றாரா?

தான் ஒரு பெரிய கட்சியை உருவாக்கி ஆட்சியைப் பிடிப்பேன் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் ரஜினி, எந்த இடத்திற்கும் நேரில் செல்லாமல், மக்களைச் சந்திக்காமல் எப்படி அரசியல் நடத்துவார்?

அவர் கட்சியை ஆரம்பித்துவிட்ட பிறகு அவர் மக்கள் மத்தியில் போகவேண்டுமே, போவாரா? போகமாட்டாரா? அங்கெல்லாம் ரசிகர் கூட்டம் ஏகமாக கூடிச் சட்டம் ஒழுங்கு கெட்டுப் போகாதா!

மக்களுக்காக மக்களுடன் இருப்பவர்தான் தலைவர். மக்களுக்கு எதிராக, அரசுக்கு ஆதரவாகத் துப்பாக்கியை ஜனநாயகப்படுத்தும் மனிதர் என்றுமே தலைவராக முடியாது.

தலைமைப் பண்பு என்பது படித்து வருவது அன்று. அது மக்களோடு இருந்து பெறும் அனுபவம். தூத்துக்குடி போராட்டத்தின்போது போராடிய மக்களை வன்முறையாளர்கள் என்று சொன்ன நடிகர் ரஜினிகாந்த் ஒருநபர் ஆணையம் அழைக்கும்போது நேரில் சென்று அவரின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்ய வேண்டும். ஆனால், நடிகர் ரஜினி நடிகராக மட்டுமே இருக்க முடியும், ஒரு நாளும் தலைவராக முடியாது என்பதை அவரின் 'பயம்' காட்டிவிட்டது.

அவர் ஆர்.எஸ்.எஸ்-இன் முகமூடி என்பது மீண்டும் மீண்டும் உறுதி ஆகிக் கொண்டிருக்கிறது.

# ஸ்டீபன் ஹாக்கிங் பார்வையில் கடவுள் உண்டா?

## நூல் அறிமுகம் - ஆர்.இளம்வழுதி

உலகம் போற்றும் அறிவியல் அறிஞரான ஸ்டீபன் ஹாக்கிங் எழுதியுள்ள *'Brief answers to the big questions'* என்னும் அவருடைய நூல் குறித்த அறிமுகமாகத் திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச்செயலாளர் சுப.வீ அவர்களின் அறிவுத்தேடல் கூட்டத்தின் உரை வடிவமே இந்நூல். கடவுள் உண்டா என்கிற கேள்விக்கு விடைதேடிய ஸ்டீபன் ஹாக்கிங் பயணத்தின் முடிவில் தத்துவம்,மதக்கோட்பாட்டை புறம்தள்ளி அறிவியலின் பாதையில் பயணித்து விடைகாணுகிறார்."கடவுள் இல்லை" என்று.அவரின் முடிவிற்கு வலுசேர்க்கும் விதமாக பல்வேறு அறிவியல் அறிஞர்களின் கூற்றுகளையும்,அறிவியல் சார்ந்த தர்க்கத்தையும் முன்வைக்கிறார். முதல் இயலின் தலைப்பே கடவுள் இருக்கிறாரா என்கிற கேள்வியோடு புத்தகம் தொடங்குகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக விவாதிக்கப் பட்டுக் கொண்டிருகிற செய்திதான் "கடவுள் இருக்கிறார், இல்லை" என்பது. இந்த விவாதம் நாடுகள் கடந்து,வயதுவரம்புகள் அற்று,எல்லாத் தளங்களிலும் படித்தவர்கள்,படிக்காதவர்கள் என்று பாரபட்சம் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது. இது வரை இந்த விவாதத்திற்குத் தத்துவ அறிஞர்களும்,மதப்போதகர்களுமே விடை தேடிக்கொண்டு இருந்தார்கள். ஆனால் இந்த 21ஆம் நூற்றாண்டில் அறிவியல் சார்ந்த முடிவை முதல் முறையாக முன் வைத்திருக்கிறார் ஸ்டீபன் ஹாக்கிங். இவருக்கு முன்பு பல்வேறு அறிவியல் அறிஞர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் யாரும் இவரைப்போல் தன் முடிவில் உறுதியும் தன்னம்பிக்கையும் உடையவர்களாக இருந்திருக்கவில்லை. ஐசக்நியூட்டன்,ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ரிச்சர்ட் டாக்கின்ஸ், அரிஸ்டார்கஸ் என்று பல்வேறு அறிஞர்களின் மதக்கோட்பாட்டையும் கடவுள் பற்றிய அவர்களின் முடிவு எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதையும் நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது இந்நூல்.




**ஸ்டீபன் ஹாக்கிங் பார்வையில் கடவுள் உண்டா?**

**ஆசிரியர் : சுப.வீரபாண்டியன்**

**வெளியீடு: கருஞ்சட்டைப் பதிப்பகம்**

**விலை: ரூ.40**

**தொடர்புக்கு: 9940407468, 044 247226408**

ஸ்டீபன் ஹாக்கிங் மொழியில் சொல்ல வேண்டுமானால், “கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதை மெய்ப்பிப்பது எல்லாம் என் நோக்கமோ,வேலையோ இல்லை நான் அதற்காகவெல்லாம் இந்தப்புத்தகத்தை எழுதவில்லை. ஆனால் என் அறிவியல் எனக்கு என்ன சொல்கிறதோ அதை உலகிற்குச் சொல்லாமல் போகக்கூடாது என்பதற்காக இதை எழுதுகிறேன்” என்கிறார். அவர் அறிவியல் கோட் பாடுகளின் அடிப்படையில் இயற்கையை விஞ்சிய ஒன்று கிடையாது என்று முடிவுசெய்கிறார். “இயற்கைதான் கடவுள் என்பது உங்கள் விருப்பமாக இருக்கலாம். அப்படி எதுவுமில்லை. கடவுள் என்று ஒருவர் உட்கார்ந்து கொண்டு இதையெல்லாம் செய்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை” என்கிறார். மேலும் அந்தப் புத்தகத்தில், “நான் போன பிறகு இந்த ஆய்வுகள் காலகாலத்திற்கும் நீடிக்கும். எதனையும் மீண்டும் மீண்டும் சோதனைக்கு உள்ளாக்குவது தான் அறிவியல். எதைச்சொன்னாலும் அப்படியே நம்பிக் கொள்வது மதம். நான் அறிவியல் சார்ந்தவன்” என்கிறார்.

இந்நூல் ஒரு பெரும் கடலை ஒரு செம்புக்குள் அடைத்துக் கொடுத்துள்ளது. யாவரும் வாங்கிப் படியுங்கள் அறிவியல், முற்போக்கு சிந்தனை மிக்க வாழ்க்கையை வாழுங்கள். ●

### காதலர் நாள் கருத்தரங்கம்




பிப்ரவரி 14, காதலர் நாள் கருத்தரங்கத்தைக் காஞ்சி மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை, சிட்லபாக்கத்தில் நடத்தியது. அதற்கு ஆர்.எஸ்.எஸ் கும்பல் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மாவட்டச் செயலாளர் இளமாறன், தாம்பரம் மோகன், தாம்பரம் செந்தில், இளங்கோ உள்ளிட்ட தோழர்கள் அக்கருத்தரங்கத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். இக்கருத்தரங்கில் தோழர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். மருத்துவர் எழிலன், கவிஞர் சல்மா, தோழர்கள் சிங்கராயர், சிற்பி செல்வராஜ், எட்வின், மு.மாறன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### குடியுரிமைச் சட்டத்திற்கு எதிர்ப்பு




குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து சென்னை வண்ணாரப்பேட்டையில் மக்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். 24-02-2020 அன்று பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன், துணைப் பொதுச் செயலாளர் சிங்ராயர், தோழர்கள் மு.மாறன், முத்தையா குமரன், எட்வின், சந்தானம், அம்பத்தூர் ராஜு, வேலூர் ஜெகன் உள்ளிட்டோர் நேரில் சென்று போராட்டத்திற்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் ஆதரவைத் தெரிவித்தனர்.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,